இப்பொழுது இரண்டு விதமான செலவுகள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன. சண்டை-சமாதானம். இதற்கு முன்பு சமாதானச் செலவு மாத்திரம்தான். அந்த ஒன்றுக்கே ஆள்பாடு முடியாமல், கடன் வாங்கி குட்டிச்சுவராகப் போய் இருக்கிறது நாடு. இப்பொழுது இரண்டு என்றால் விளங்கவே விளங்காது. எனக்கே ரொம்ப கவலையாக இருக்கிறது. நமது முன்னாள் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள், இந்தச் சண்டை வந்தவுடனேயே அபிப்பிராயம் கூறியதை நான் ஒரு நாள் பேப்பரிலே பார்த்தேன். "வழி தவறி நடந்துவிட்டோம், அதைப்பற்றி யாரும் சர்ச்சை பண்ணிக்கொள்ளவேண்டியதில்லை, மேற்கொண்டு காரியத்தைக் கவனியுங்கள்" என்று சொல்லி இருந்தார். எவ்வளவு வருத்தத்தில் சொன்ன வார்த்தைகள் அவை? தேசத்தையே தன் குடும்பமாகப் பாவித்துத்தானே சொன்னார். அந்தக் கவலையில் ரொம்ப பேர் போய்விட்டார்களே! இம்மாநில முன்னாள் முதலமைச்சர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் நேற்று இச் சபையில் சொன்னாரே, "இரண்டு மாதம்தானே இருக்கிறது; சுதந்திரம் போய்விடப்போகிறது" என்று.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போய்விடும் என்று அவர் சொல்லவில்லை.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : முதலிலே போய்விடும் என்றுதான் சொன்னார். கடைசியிலே கொஞ்சம் மாற்றிக்கொண்டார்; எடுத்து வேண்டுமானால் பார்க்கலாம். ஆகையினால் பழைய மந்திரிகளே, பெரியவர்களே, ஆண்டு அனுபவித்தவர்களே சொல்லுகிறார்கள் என்றால், என்னைப்போன்று நேற்று வந்தவர்கள் சொல்லக்கூடாது என்றால் எப்படி சும்மா இருக்க முடியும்? இவைகள் எல்லாம் நீங்கள் செய்த வினை செய்த வினைக்குப் பலனை அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.

7th March 1963] [திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்]

இந்த நிதிநிலே அறிக்கையில், விவசாயத்தை உற்பத்தி செய்ய வேண்டும், அப்படிச் செய்தால்தான், யுத்தகாலத்திலும் சமாதான காலத்திலும் போதுமான அளவுக்கு சேமிப்பு வைக்க முடியும் என்று சொல்லப்பட்டது. நடைமுறையில் எப்படியிருக்கிறது? விவசாயிகளுக்கு உற்சாகமே போய்விட்டது. 1962--63-ல் நெல் விற்ருர்களே, அப்பொழுதே போய்விட்டது. இரண்டாவது போகம் பயிர் செய்யாதே என்று சொல்லிவிட்டார்கள். ஒரு போகம்தான் செய்தார்கள். பம்பு செட் வைத்துக்கொண்டிருக் கிறவர்கள் ஒரு பகுதி சாகுபடி செய்துவிட்டு மீதியை அப்படியே விட்டுவிட்டார்கள்; காரணம் இவர்களுக்குக் கரண்ட சிலவு அதிக மாகிவிட்டது. நீங்கள் உற்பத்தியை விருத்தி செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டேதான் இருக்கிறீர்கள். எதை விருத்தி பண்ணவேண்டும் என்று சொல்லுகிறீர்களோ அதன்மேலேதான் மேலும் மேலும் வரியைப் போடுகிறீர்கள். விவசாயிகளுக்கு நில வரி, தண்ணீர் வரி, பஞ்சாயத்து வரி, இன்னும் போதாக் குறைக்கு பம்பு செட் வைத்திருந்தால் அதற்கும் கரண்ட் வரி, இப்பொழுது அதிகமாய்விட்டது. இப்பொழுது அந்த கரண்டும் சரியாகக் கிடைப்பதில்லே. மேட்டூரிலே தண்ணீரும் கிடையாது. இப்படியாகப் பல சங்கடங்கள் இருக்கிறபோது விவசாயம் எப்படி விருத்தியாகப் போகிறது. இப்பொழுது விவசாயம் பண்ணுவதால் ரூபாய்க்கு அரை ரூபாய் கிடையாது. பெரிய மிராசுதார்கள், ஜமீன்தார்கள் எல்லாம் இருக்கிருர்கள். என் னிடம் அவ்வளவு அதிகமாக நிலம் இல்லே. வேலிக் கணக்கில் நிறைய வைத்துக்கொண்டிருப்பவர்கள் பலர் இருக்கிருர்கள். அவர்களுக்கு கஷ்டம் தெரியாமல் இருக்கலாம். என்கிட்டே சாதாரணமான அளவுதான். அதற்கே இந்த பாடுபட வேண்டிய தாக இருந்தால் சும்மா இருந்துவிடவேண்டும் என்றுதான் தோன்றுகிறது. என் அனுபவத்தைச் சொல்லுகிறேன்.

இந்த கிராமத் தொண்டர்கள் படையை மட்டும் வைத்து விட்டால், பிரயோஜனம் இல்லே. அதை எப்படி உபயோகப் படுத்துவது என்பதுதான் முக்கியமான விஷயம். ஏர் பிடிக்காத வர்கள், கலப்பை எடுக்காதவர்கள் இல்லாமல், வயலில் இறங்கி வேலே செய்கிறவர்கை இருக்கவேண்டும். ஒரு ரூபாய் கூலி என்றுல் நான் கொஞ்சம், நீ கொஞ்சம் என்று கவர்ன்மெண்டும் நிலச் சொந்தக்காரரும் கொடுத்தால், கிராமத்தில் விவசாயம் அபிவிருத்தியாகும். அந்த மாதிரி பத்து ஆளுக்குக் கொடுங்கள் ரூ. 1-8-0 என்றுல் நீ 3/4 ரூபாய் நான் 3/4 ரூபாய் என்று இருக்க வேண்டும். உணவுப் பொருள்கள் உற்பத்தியை அபிவிருத்தி செய்யவேண்டுமானுல், தொண்டர் படையை வைத்து வெறும் பிரசாரம் செய்தாலாகாது. ஏர் உழுகிறவன்கிட்டே அப்படி இப்படி என்று விவகாரம் பேசினுல் வெளியே போ என்று சொல்லுவான். நாங்கள் பணத்தையும் கொடுத்துவிட்டு, வேண் டிக்கொள்ளவேண்டிய நிலேமையில் இருக்கிறது. வேலேக்காரர் களே வேலே வாங்கும் காலமா இல்லே இப்பொழுது. இங்கே

ஆபீசுகளில்கூட மேலே இருக்கிற அதிகாரிகள் எல்லாம் கீழே இருக்கிறவர்களிடம் எவ்வளவு கஷ்டத்துடன் வேலை வாங்க வேண்டியிருக்கிறது என்பது உங்களுக்கே தெரியும்.

திரு. கே. ராமதாஸ் : வேலைவாங்குவதற்காக என்றும் வேலை செய்வதற்காக என்றும் இப்படி தனிப்பட்ட இரண்டு சமூகங்கள் இருக்கிறதா ?

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : இவைகள் யாவும் வெறும் பேச்சு அளவுதான். பேச்சுக்கு அழகாகவும், சொல்லுக்குச் சிங்காரமாகவும்தான் இருக்கும். வேலைக்காரர்கள் இரண்டு நாளைக்கு வராவிட்டால், அவர்கள் வீட்டுக்குப் போய், சும்மாவா என்று கூப்பிட்டு அழைத்துக்கொண்டு வரவேண்டியதாக இருக்கிறது. இந்தப் பேச்சு எல்லாம், இந்த சோஷலிஸம், அது இது எல்லாம் பேசுவது சும்மா ஓட்டு வாங்குவதற்காகத்தான்.

நீர்ப்பாசனத் திட்டம் என்று ஒரு தலைப்பு இருக்கிறது. இந்த டிபார்ட்மெண்டைப்பற்றி என்னதான் சொல்லுவது என்று புரியவில்லை. நானும் மூன்று வருஷமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். காஞ்சிபுரத்திற்குப் பக்கத்திலே செவிலிமேடு என்ற இடத்தில் மதகு உடைந்துவிட்டது. ஒன்றும் செய்யவில்லை. பஞ்சாயத்துக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு District Development Council என்று ஒன்று இருக்கிறதே. செங்கற்பட்டு ஜில்லா கவுன்ஸில் கூட்டத்திலும் இதைப் பேசிப் பார்த்தேன். என்ன அது? ஜமாபந்திதான். கலெக்டர் கிராமத்திலேபோய் ஜமாபந்தி பண்ணினால் அங்கே போய் குறைகளைச் சொல்லிக் கொள்ளுவது வழக்கம். கிராம விவசாயிகள் நாங்கள் மெம்பராக வந்துவிட்டோம். அங்கே அவர்கள் இருக்கிற இடத்திற்குப்போய் குறைகளைச் சொல்லுகிறோம். அதற்குப் பெயர் District Development Council அங்கேயும் ஒன்றும் இல்லை. எவ்வளவோ பேசிப்பார்த்தாய் விட்டது. இவ்வளவு தூரம் வந்து இங்கே சட்ட மன்றத்தில் சொன்னாலும் இங்கேயும் அதே நிலைமை தான் இருக்கிறது. இந்த மூன்று வருஷமாகத்தான் நானும் சொல்லிவரு
4-30 p.m. கிறேன். வெள்ளைக்காரன் கால சட்டசபைக்கும், இந்தக் கால சட்ட சபைக்கும் எப்படி இருக்கிறது என்றால், ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. என் அனுபவத்தில் சொல்லுகிறேன். அந்தக் காலத்திலே சட்ட சபையிலே சொன்னால், கீழே எல்லாம் சொல்லி சிரமப்பட்டுவிட்டு, நடக்காமல் போனதால் இங்கே வந்து சொல்லுகிறார்கள் என்று உடனடியாக ஜாக்கிரதையாகப் பார்த்துச் செய்ய ஏற்பாடு செய்வது சர்க்காருடைய மனப்பான்மையாக இருந்தது. இப்பொழுது ஒன்றும் இல்லை. அப்பொழுது கேள்விகளுக்கு Interpellations போட்டால் ரொம்ப அபூர்வமாகப் போடுவது. கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு அந்தக் காயத்தை உடனடியாகச் செய்வதற்குக் கீழே இருக்கிற அதிகாரிகளிடம் போய் துரிதப்படுத்துவார்கள். இப்பொழுது புத்தகத்தில் இருக்கிறதே தவிர விவகாரத்தில் ஒன்றும் இல்லை. குறைகளை எடுத்துச் சொல்லுகிறோம். புத்தகத்தில் ஏறுகிறது காரியத்தில் ஒன்றும் இல்லை.

7th March 1963] [திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்]

நிர்வாகத்தில் இருக்கிறதைச் சொல்ல வேண்டியதே இல்லை. மேலே இருக்கிறவர்கள் தங்களால் கூடியவரையில் செய்துவிட்டு கீழே இருக்கிறவர்களுக்கு விட்டு விடுகிறார்கள். இப்பொழுது இருக்கிற இளைஞர்களுக்குப் பொறுப்பு இல்லை, வேலையைப் பற்றியோ promotion-ஐப் பற்றியோ கவலை இல்லை. ஷோக் கிலேதான் இருக்கிறார்கள். வேலை கற்றுக்கொண்டு திறமையாக இருக்கவேண்டும் என்ற எண்ணமே இல்லை. பழைய ஆட்கள் கொஞ்சம் இருப்பதால் ஏதோ நடக்கிறது; இல்லாவிட்டால் நிர் வாகம் close; படு மோசமாகப் போய்விடும். என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன்.

விவசாயத்தை அபிவிருத்தி பண்ணவேண்டுமென்றால், அதற்கு மின்சாரம் அவசியம். மின்சாரத்தை இந்த மாதிரி இடங்களில் Fan-களை ஓடவிடுவதன்மூலம் வீணடிக்காமல், இதைக் குறைத்துக் கொண்டு, விவசாயத்துக்கு அதிகமாக மின்சாரம் கொடுக்க வேண்டும். இங்கே Fan களை ஓடவிட்டுவிட்டு, விவசாயம் செய்கிற இடத்தில் fuse-ஐப் பிடுங்கிக்கொண்டுபோய் விடு கிறார்கள். கரண்டு இல்லை; அதனால் விவசாயத்துக்குத் தண்ணீர் இல்லை என்ற நிலைமை அப்படியிருக்கிறது. ஆகவே நீங்கள் மற்ற தற்கெல்லாம் மின்சாரத்தைக் குறைத்துக்கொண்டு, கட்டாயம் மின்சாரத்தை விவசாயத்துக்குக் கொடுக்கவேண்டும்.

கூட்டுறவு ஸ்தாபனம் என்பதில் பழைய கூட்டுறவு, புதிய கூட்டுறவு என்று இரண்டு இருக்கிறது. பழைய கால கூட்டுறவு தத்துவம் வேறு; இப்போது இருக்கிற தத்துவம் வேறு. பழைய காலத்தில் அப்போதிருந்த தலைவர்களாகிய ரத்தினசபாபதி முதலியார், ராமலிங்க செட்டியார் போன்றவர்கள் ஜனங்களுக்கு இதைச் செய்யுங்கள், அதைச்செய்யுங்கள் நல்லது என்று சொல்ல அதை அதிகாரியிடம் Register பண்ணிக் கொடுக்கச் செய்வார். இப்போது சர்க்கார் எல்லாம் முடிவு பண்ணி வைத்துக்கொண்டு, ஜனங்களை இதைச் செய் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் சொல்லுவதை நீங்கள் Register பண்ண வேண்டும். அதுதான் கூட்டுறவு அப்போதிருந்தது கூட்டுறவு. இப்போதிருப்பது சர்க் கார் சொல்லுவதை ஜனங்கள் செய்யவேண்டும். சம்பளம் வாங்கிக் கொண்டு அதிகாரம் பண்ணுகிறார்கள். ஹானரரியாக வேலை செய்ய அப்போதிருந்தவர்கள் கடமைக்கு வந்தார்கள். இப்போது உரிமைக்காக இருக்கிறார்கள். Package என்ன திட்டமென்று எனக்கு விளங்கவில்லை. அதை எனக்கு விளக்க வேண்டும்.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களில் போய்ப் பார்த்தால், ஆட்கள் நிறைய வேலை செய்கிறார்கள். உனக்கு என்ன வேலை என்றால், Social work என்கிறார். Social work என்றால் என்ன என்றால், அப் புறம் Propaganda என்கிறார். அவருக்கு 100 ரூபாய் சம்பளம். இதே மாதிரி 3, 4 பேர்கள் காஞ்சிபுரத்தில் இருக்கிறார்கள். இப்படி Party-ஐப் பலப்படுத்துவதற்கு Social work. அந்த Work

என்று போட்டு, இந்த மாதிரி ஆட்களுக்கு எல்லாம் பணம் செலவாகிறது. 5¼ கோடி ரூபாய் Social work-க்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அவ்வளவும் Propaganda-வுக்குத்தான். இந்த Social worker-களை appoint பண்ணக்கூடிய அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்றால், நம்மிடம். பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அந்த அதிகாரம் இல்லை. ஆகையால் இஷ்டம்போல் ஆளை வைத்துக்கொள்ளுகிறார்கள்.

அடுத்தபடியாக, இந்தத் திட்டக் கமிஷன் இருக்கிறதே, அது தனி சர்க்காராக நடக்கிறது. இந்திய சர்க்கார் கூட அதற்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. அவர்கள் போடுகின்ற திட்டத்தை நாம் செய்கிற வேலையாட்களாக இருக்கிறோம். மிகவும் கஷ்டமாக இருக்கிறது அதைப் பார்த்தால்.

நம்முடைய சபையின் கூட்டத்தை மாலை 3 மணிக்கு என்று வைத்திருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அப்படி வைத்திருப்பதால், இங்கே வந்து இளைஞர்களும் தூங்குகிறார்கள். நம்மைபோன்ற வயதானவர்களும் தூங்குகிறார்கள். ஆகவே இந்தச் சபையின் கூட்டத்தை காலை 10 மணிக்கு என்று வையுங்கள், இல்லாவிட்டால் மாலை 6 மணிக்கு என்று வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கக் கட்டுபாடு பற்றி நமது சபையிலும், கீழ் சட்ட சபையிலும் பெரும் சண்டை போட்டுக்கொள்ளுகிறார்கள். நமது அமைச்சரவர்கள் ஏதாவது சமாதானம் சொல்லி தாலிக்கு மட்டுமாவது 22 காரட்டு தங்கம் வாங்கிக் கொடுத்தால்தான் இவர்கள் சும்மா இருப்பார்கள். இல்லாவிட்டால் சண்டை போடுவார்கள். இல்வாழ்க்கை எப்படி இருக்கணும் என்பது எனக்குத் தெரியும். என்னைப் பொறுத்தவரைத் தாலியைப் பற்றிக் கவலையில்லை. இல்வாழ்க்கை பண்பு பயன், அன்பு அறம் தான் என்பது என் முடிவு. இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வி. எம். சுரேந்திரராம்: உதவித் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய நிதியமைச்சர் சபைக்களித்த 1963-64-ம் ஆண்டு தமிழ் நாட்டு வரவு-செலவு அறிக்கையை வரவேற்று, சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் நாடு இன்று இருக்கும்படியான நெருக்கடியான நேரத்தில் நம்முடைய அரசாங்கம் ஒருவித வரியையும் விதிக்காமல் வரவு-செலவுத் திட்டத்தை அளித்திருப்பது நமக்கெல்லாம் மிகச் சந்தோஷத்தை அளிக்கிறது. அதே சமயத்தில் மத்திய அரசாங்கம் சில வரிகளைப் போட்டிருக்கிறார்கள். அப்படிப்
4–40 p.m. போட வேண்டிய கட்டம் நேரிட்டதால் போட்டிருக்கிறார்கள். இரு சபைகளிலும் பேசியிருக்கின்ற அங்கத்தினர்கள் மக்களுக்கு அத்தியாவசியமான பொருட்களின்மீது மத்திய அரசாங்கம் கூட்டியிருக்கும் வரியைக் குறைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மண்ணெண்ணை, மற்றும் காருக்கு வேண்டிய பெட்ரோல், டீசல் போன்ற பொருள்களின்மீது அதிகரிக்கப்பட்டுள்ள வரியைக் குறைத்தால், மக்களுக்கு நன்மையாக இருக்குமென்று இரு சபைகளிலும் அங்கத்தினர்கள் ஏகோபித்துக் கேட்டுக் கொண்

7th March 1963] [திரு. வி. எம். சுரேந்திரராம்]

டிருக்கிறார்கள். மண்ணெண்ணெ ஆண்டி முதல் அரசன் வரை உபயோகிக்கின்ற பொருளாகும். அதனால் மண்ணெண்ணெ மீதுள்ள வரியைக் குறைத்தால் நலமாக இருக்குமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பெட்ரோல், டீசல்மீது அதிகரிக்கப்பட்டுள்ள வரியைப் பற்றிப் பேசும் போது, ஏழையா கார் வைத்திருக்கிறான் என்று சில அங்கத்தினர்கள் கேட்டார்கள். இப்போது பஸ்களுக்கும், லாரிகளுக்கும் டீசலைத்தான் உபயோகிக்கிறார்கள். பஸ் போக்குவரத்து பணக்காரன் மட்டும் உபயோகிப்பது அல்ல. பஸ்ஸில் போவது ஏழைகள்தான். டீசல் மீது வரி ஏறியிருப்பதால், அதன் விலையும் ஏறியிருக்கிறது. எனவே பஸ், லாரிச் சொந்தக்காரர்கள் பஸ், லாரி கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு கட்டணமும் ஏறுவதால், பாமர மக்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய மக்களின் குறையை எடுத்துச் சொல்லி, மண்ணெண்ணெ, பெட்ரோல், டீசல் மீது போடப்பட்டுள்ள வரியைக் குறைத்தால் ஏழை மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தாற்போல, இப்போது நாம் நம்முடைய நாட்டைப் பாதுகாக்க ராணுவத்தைப் பலப்படுத்த வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். அதுவும் சீனக்காரன் நம் நாட்டை ஆக்கிரமித்துள்ளபோது, நம்முடைய ராணுவத்தைப் பலப்படுத்துவது மிகவும் அவசியம். அதற்குப் பணம் தேவை. மதிப்பிற்குரிய நமது மாஜி முதலமைச்சர் ஸ்ரீமான் ஓ. பி. ராமசாமி ரெட்டியார், நாம் என்ன செய்திருக்கிறோம், செய்ய வேண்டிய வேலையைச் சரியாக செய்திருக்கிறோமா, என்று குறை கூறிப் பேசினார். அப்படிப் பேசும்போது, நாம் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பேச வேண்டும். இப்போது எங்கள் நீலகிரி ஜில்லாவில் வெல்லிங்டனில் ஒரு நாளைக்கு ஓராயிரம் பேரை ராணுவத்துக்குச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் சம்பளத்துக்கும், மற்றச் செலவுக்கும் சர்க்கார் எங்கே போவார்கள் என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல அரவங்காட்டில் உள்ள வெடி மருந்துத் தொழிற்சாலையில் சில ஆண்டுகளுக்கு முன்னால் 2 ஆயிரம், 3 ஆயிரம் தொழிலாளர்கள்தான் வேலை செய்தார்கள். இப்போது நான்கைந்து மாதங்களாக அந்தத் தொழிற்சாலை மூன்று ஷிப்டு வேலை செய்து, அதில் 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஒரு தொழிலாளிக்கு மாதச் சம்பளம் ரூ. 100. இதற்கெல்லாம் பணம் வேண்டும். நம்முடைய மதிப்பிற்குரிய பிரதம மந்திரி நமது நாட்டைக் காப்பாற்ற பல விதத்தில் பாடுபட்டுக்கொண்டு வருகிறார், அவருடைய பேச்சால் உலகமே சமாதானத்தைப் பெற்றிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். அப்படியிருக்கும்போது நம்முடைய பிரதம மந்திரியை, வாயால் பேசிக் கொண்டிருக்கிறார், வாயால் உலகத்தையே ஆளப் பார்க்கிறார் என்று சிலர் குறை கூறுவது எவ்வளவு தவறு என்று நமக்குத் தெரிகிறது. அதுவும் இந்த நெருக்கடியான நேரத்தில், மந்திரி பொறுப்பு, இன்னும் பெரிய பொறுப்புக்களை எல்லாம்

[திரு. வி. எம். சுரேந்திரராம்] [7th March 1963

வகித்தவர், அரசாங்கம் வரி போட்டது தவறு என்று பேசுகிறார் என்றால், அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. நாட்டில் என்ன நடக்கிறது, எவ்வளவு காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பாராமல், கிணற்றில் உட்கார்ந்துகொண்டு தவளை மாதிரி கத்தக் கூடாது. **Military Recruitment** ஆரம்பித்த பிறகு, ராணுவத்திலும் மற்றத் துறைகளிலும் அரசாங்கம் என்ன செய்திருக்கிறார்கள் என்று தெரிய வேண்டுமானால், எங்கள் நீலகிரி ஜில்லாவுக்கு வந்தால் தெரிந்து கொள்ளலாம் என்று தெரிவித்துக் சொல்ல விரும்புகிறேன்.

அதே சமயத்தில் செலவு இனங்களில் சில விஷயங்களில் அரசாங்கம் சிக்கனத்தைக் கையாண்டால் நல்ல விதமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சில இலாக்காக்களில் வேண்டாத காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் ஊரில் **Cinchona Department** இருக்கிறது. சில வருஷங்களுக்கு முன்பு வரையில் 10 ஆயிரம் ஏக்கரில் **Plantation** இருந்தது. இப்போது **Quinine**-க்கு **demand** இல்லாததால், **Plantation**- இரண்டாயிரம் ஏக்கராகக் குறைந்து விட்டது. 8 ஆயிரம் ஏக்கர் **Plantation**-ஐ எடுத்துவிட்டார்கள். இப்போது அந்த இலாக்கா டைரக்டர்கள் வேறு விதமான தொழிலை ஆரம்பித்திருக்கிறார்கள். **Extraction of Oils** என்று போட்டு **Geranium Plant** வைத்துச் செய்கிறார்கள். மற்றும் சில **Herb** -களை வைத்து மருந்து செய்கிறார்கள். இந்த இரண்டையும் **Forest** அல்லது **Agriculture** டிபார்ட்டுமெண்டிடம் கொடுத்து விட்டால் செலவு மிச்சமாகும். இப்போது ஒரு டைரக்டர், **P. A.** ஆபீஸ் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்க இடம்கூட நீலகிரியில் இல்லாததால் **Forest Department** உடன் சேர்த்துவிட்டால் நமக்கு பெருந்தொகை மிச்சமாகும். இதை அமைச்சரவர்கள் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் ஏற்கனவே பேசியிருக்கிறார்கள். இந்த சபையிலும் பேசியிருக்கிறேன். உருளைக்கிழங்குக்கு வியாதி வந்திருக்கிறது. உருளைக்கிழங்கு, டீ இரண்டுக்கும் வியாதி வந்திருப்பதால், அங்கு ஜனங்களுடைய குறை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. ஒரு மாதத்திற்கு முன்பு மதிப்பிற்குரிய **Information and Publicity** மினிஸ்டர் வந்தபோது எங்கள் ஜில்லாவைப் பஞ்சமுள்ள ஜில்லாவாகக் கருதினாலும், நன்றாக இருக்குமென்று கேட்டுக்கொண்டார்கள் மக்கள். பொதுக்கூட்டம் எங்கள் ஜில்லாவில், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நடந்தால் கூட்டம் கூடாது. பிப்ரவரி மாதத்தில் மந்திரி வருகிறார்கள் என்று சொன்னவுடனேயே எதிர்பாராத கூட்டம் வந்துவிட்டது. சுற்றியுள்ள பல கிராமங்களிலிருந்தும் தங்கள் கஷ்டங்களைச் சொல்வதற்காக கூட்டமாக வந்துவிட்டார்கள். ஒருவேளை சாப்பாட்டிற்குக்கூட இல்லாமல் நீலகிரி ஜில்லாவில் பலர் இருந்திருக்கிறார்கள். நேற்றுகூட நமது நிதியமைச்சர் அவர்களைக் கண்டு சொன்னோம். சர்க்கார் என்ன செய்வது என்று கேட்டார்கள். எல்லோரும் அங்கு விவசாயிகள்தான். உருளைக்கிழங்கு

7th March 1963] [திரு. வி. எம். சுரேந்திராம்]

விவசாயம் செய்கிறார்கள். பத்து மூட்டை விதை போட்டவர்களுக்கு ஒரு மூட்டைகூட திரும்ப வரவில்லை. அதே சமயத்தில் அதன் விலை ரூ. 60, 70 என்று விற்கிறது. அதைச் சேர்த்து விற்பதற்குக் கிடங்குகள் கிடையாது. விலை கொடுக்கவும் ஆள் கிடையாது. டீ-க்கு வரி வந்திருக்கிறது. டீ-யிலும் டிசீஸ் வந்துவிட்டதால், டீ-பிளாண்டுக்கும் ஆபத்தாக இருக்கிறது. உருளைக்கிழங்கும் டிசீசால் பாதிக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி ஜில்லாவுக்கு 'பேக் போன்' மாதிரி இருப்பது இவை. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. இப்போது கச்சாபிலிம் தொழிற்சாலை ஆரம்பித்ததால் ஒரு சில மக்கள் அங்கு வேலை செய்கிறார்கள். நீலகிரி ஜில்லாவுக்கு ஏதாவது ஒரு தொழில் மேலும் ஆரம்பித்தால் பரவாயில்லை. தொழில் ஆரம்பிக்காவிட்டால், நீலகிரி ஜில்லா மக்களின் நிலைமை என்னவாகும்? மந்திரிகள், அதிகாரிகள் எல்லாம் எங்கள் ஜில்லாவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். முக்கியமாக இரண்டொரு தொழில் ஆரம்பித்தால், எந்த நேரத்திலும் ஒரு பயமுமில்லாமல் இருக்கமுடியும். பல ஆண்டுகளாக விவசாயம் பாதிக்கப்படுகிறது. கச்சா பிலிம் ஆரம்பித்திருக்கிறார்கள் இப்போது. குந்தா புராஜெக்ட் நடந்தது. இப்போது கோயம்புத்தூர் ஜில்லாவில்தான் அதுபோன்ற வேலைகள் நடக்கின்றன. எங்கள் ஜில்லாவில் உத்தேசித்திருக்கிற தொழிற்சாலைகளை ஆரம்பித்தால், மிகவும் சௌகரியமாக இருக்கும். எமர்ஜன்சி என்று ஒன்றும் செய்யாமல் இருந்தாலும், அதைச் சற்று மாற்றிக் கொண்டு எமர்ஜன்சியை மட்டும் பார்த்துக்கொண்டில்லாமல், மக்களையும் கொஞ்சம் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டில் காடு வளர்க்கவேண்டுமென்ற ஒரு திட்டம் போட்டிருக்கிறோம். நீலகிரி ஜில்லாவில் இப்போது விறகுக்காக எல்லாவற்றையும் வெட்டிக் காலி செய்துவிட்டார்கள். எங்கள் ஜில்லாவில் நான் படித்துக்கொண்டிருக்கும்போது அவரவர்கள் காட்டிற்குச் சென்றுதான் விறகு பொறுக்கிக்கொண்டு வருவார்கள். இப்போது அங்கெல்லாம் ஸ்டவ் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு விறகு கிடைக்கவில்லை என்றால், அங்குள்ள காட்டின் நிலைமை எப்படியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். காடு உற்பத்தியைச் செய்யவேண்டுமென்று நாங்களும் வரவேற்கிறோம். அதேசமயத்தில் அங்கு பிளாண்டேஷன் ஆரம்பிக்கும்போது கடலூரில் மேட்ச் பாக்ஸ் செய்வதற்கான மரங்களை உற்பத்தி செய்யவேண்டுமென்று இருந்தது. 'சாஃப்ட் வுட்' பயிர் செய்ய ஆரம்பித்தார்கள். அது வெற்றியளிக்கவில்லை. காடும் பாழாக்கப்பட்டது. செய்வன திருந்தச் செய்யவேண்டுமென்பது போல முன்பே 'எக்சாமின்' செய்யவேண்டும். இல்லாவிட்டால் இன்னும் விறகு விலை அதிகமாகிக்கொண்டே போகும். கூட்டுறவு சொசைடிக்கு ஒரு சலுகை இந்த விறகு விற்பதில் கொடுக்க வேண்டும். இப்போது 'கூப்' ஆக்ஷனில் எடுக்க தனி மனிதர்கள் வருகிறார்கள்.

[திரு. வி. எம். சுரேந்திராம்] [7th March 1963

எலக்ட்ரிக் போஸ்டுகளுக்கு அந்த மரங்கள் அதிக உபயோகமாக இருக்கிறது. கண்ட்ராக்டர்கள் அந்த மரங்களை நல்ல விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போகிறார்கள். கூட்டுறவு சொசைடி ஓப்பன் மார்க்கெட்டில் போய் கஷ்டப்படாமல் ஒரு சலுகை கொடுத்தால், இந்த ஜில்லாவில் மட்டுமல்ல, கோயம்புத்தூர் ஜில்லாவுக்குக்கூட நல்ல முறையில் கொடுக்க முடியும். கோயம்புத்தூர் ஜில்லாவில் ஒரு லாரி ரூ. 150-க்கு விற்கிறார்கள். கூட்டுறவு சொசைடியில் 'கூப்' ஆக்ஷன் விடும்போது, சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டூரிஸ்ட் ஹோமைப்பற்றி எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய அம்மையார் அவர்கள் குறிப்பிட்டு டூரிஸ்டுகள் தங்க இடமில்லை யென்று சொன்னார்கள். அந்த அம்மையாருக்கும் இந்த சபைக்கும் நான் ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். சிங்கிள், டபிள் ரூம் என்று வைத்துக்கொண்டு சீசன் காலத்தில் ரூ. 6, 8 கூட சார்ஜ் செய்கிறார்கள். சாதாரண தனிப்பட்டவர்கள் அவற்றைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். குன்னூரில் பெங்களூர் கிளைமேட் மாதிரி இருக்கிறது. 5,000 அடி உயரத்திலுள்ளது. அதில் டூரிஸ்ட் ஹோம் கட்டினால் இன்னும் நன்றாக இருக்கும். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4–50 p.m.

(Mr. Chairman in the Chair.)

கடைசியாக, அரிஜன் வெல்ஃபேர் டிபார்ட்மெண்டைப்பற்றி நேற்று ஒரே ஒருவர்தான் பேசினார்கள். இப்போது அதற்கு 3 கோடி 90 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். 1972-ம் வருஷத்தோடு அந்தச் சலுகை தீர்ந்துவிடுமென்று நினைக்கிறேன். அந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக அவர்களுக்கு வேண்டியதைச் செய்வதுதான் சர்க்கார் கடமை. மனை கட்டுவதற்காக அவர்களுக்கு வேண்டியதைச் செய்ய ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து வருகிறார்கள். வீடு கட்டிக்கொடுக்கும் வேலைகூட எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். முன்னைவிட இப்போது கம்மியாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். நீலகிரி ஜில்லாவில் ஜனங்கள் வெளியே போய் இரவில் இரண்டு மணி நேரம் இருந்தால் எவ்வளவு கஷ்டமாக இருக்கிறதென்பது தெரியும். 10 கம்பளிகள் போத்திக்கொண்டாலும் தாங்க முடியவில்லை, குளிர் என்கிறார்கள். அரிஜனங்கள் வெளியில் இருந்தால் எவ்வளவு கஷ்டமடைவார்கள் என்று யோசிக்க வேண்டும். அதனால் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அதிகரிக்க வேண்டும். மலை ஜாதியினருக்கும் சேர்த்து வசதி செய்துதர வேண்டும். கூடலூர் தாலுகாவில் வசிக்கக்கூடிய உரியர், குறும்பர் இவர்களைப் பார்த்தால் மனிதர்களாக நாம் நினைக்கவே முடியாது. அவர்களுக்கெல்லாம் சர்க்கார்தான் வசதி செய்யவேண்டும். மலை ஜாதியினருக்கும் குறும்பர்களுக்கும் வட ஆற்காடு ஜில்லா மலை ஜாதியினருக்கு அளிக்கப்படும் சலுகைகளைக் கொடுத்து உதவினால் நன்றாக இருக்குமென்று கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் பேச அனுமதி அளித்ததற்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

7th March 1963]

திரு. பி. வெங்கடாசலத் தேவர் : மதிப்பிற்குரிய Chairman அவர்களே, நமது நிதியமைச்சர் அவர்கள் 1963-64-வது ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பித்திருப்பதை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இந்த வருஷம் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எந்தவிதப் புதிய வரிகளும் இல்லாததைப்பற்றி எல்லோரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். அதோடல்லாமல், திட்ட வேலைகளிலே எதையும் குறைக்காமல் எல்லா வேலைகளும் நடைபெறப் போகிறது என்பதையும் அறிந்து மிக மிக மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் மத்திய சர்க்கார் விதித்திருக்கின்ற வரிகளைப்பற்றிச் சிலர் குறை கூறுகிறார்கள். இதை ஒரு சில கட்சிக்காரர்கள் தங்களுடைய கட்சிக்குச் சாதகமாகவும், கட்சியை வளர்ப்பதற்காகவும், தாங்கள் பதவிக்கு வர வாய்ப்பாக இருக்கும் என்ற எண்ணத்தில் மக்களிடம் தப்பாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இப்பொழுது நம் நாட்டின்மீது சீனா ஆக்கிரமித்திருக்கின்றது. நாம் வலிய வம்புக்குப் போகவில்லை. இந்த நிலைமையில் சீனா ஆக்கிரமித்திருந்தால், அதை நாம் எப்படி விட்டுவிட முடியும்? வந்த சண்டையை விடக்கூடாது, வலுச் சண்டைக்குப் போகக் கூடாது என்ற முறையில், வந்த சண்டையை முறியடித்து நாட்டைக் காப்பாற்றியாக வேண்டும். நமது பாதுகாப்பு வேலைகளுக்கு வரி போடாமல் எப்படித்தான் செலவு செய்ய முடியும் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். இந்தக் காரியத்திற்கு வரியாகவும், பணமாகவும், தங்கமாகவும் கொடுப்பதோடல்லாமல், நம்முடைய நாட்டையும் நம்முடைய நாட்டு மக்களுடைய மானத்தைக் காப்பாற்றவும் எல்லா ஆண்களும் பெண்களும் தங்களுடைய உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் நம்முடைய மானத்தைக் காப்பாற்ற முடியும். 'பெற்ற தாயும் பிறந்த நாடும் நற்றவ வானினும் நனி சிறந்ததுவே' என்ற பாரதியார் வாக்குப்படி, நம்முடைய தாய்நாட்டைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமை. இந்த நிலையிலே எதிர்க்கட்சிக்காரர்கள் நமது அரசாங்கம் வரி போடாமல் செலவு செய்வதற்கு ஒரு வழி சொன்னாலாவது நன்றாக இருக்கும். எந்த யோசனையும் சொல்லாமல் வரி போடுகிறார்கள், இது அநியாயம் என்று பாமர மக்களிடம் இஷ்டப்படி போய் பிரசாரம் செய்வது ரொம்ப வருந்தவேண்டிய விஷயம், மற்றும் குறிப்பாக இந்த அவசர காலத்தில் அவ்வாறு செய்வது.

5-00 p.m.

அரசாங்க வரவு செலவு திட்டத்தில் ஆரம்பக் கல்விக்கு ஏராளமாகப் பணம் ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டு வருகிறது. ஆரம்பக் கல்வி விஷயத்தில் மத்திய சர்க்கார் கல்விக் குழு கொடுத்திருக்கிற அறிக்கைப்படி 69 குழந்தைகள்வரை ஒரு ஆசிரியர்தான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. எழுபதுக்கு மேல் ஆனால்தான் இரண்டாவது ஆசிரியரை வேலையில் வைத்துக் கொள்ளலாம். இது கொஞ்சம் கஷ்டமான காரியம். இந்தத் திட்டத்தை ஐந்தாவது வகுப்புக்குமேல் வைத்தால் நல்லதாக இருக்கும், ஏனென்றால் அந்தக் குழந்

[திரு. பி. வெங்கடாசலத் தேவர்] [7th March 1963

தைகள் கொஞ்சம் அறிவு வளர்ச்சி அடைந்திருக்கும். ஆரம்பப் பள்ளி ஒன்றுவது வகுப்பிலேயே 69 குழந்தைகளை வைத்து நடத்துவது என்றால் ரொம்பவும் கஷ்டம். அந்தப் பிள்ளைகளைச் சரிவர வைத்து காவந்து பண்ணுவதே முடியாத காரியம். இதைக் கல்வியமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும். ஒரு கட்டிடத்திற்கு எப்படி அஸ்திவாரம் முக்கியமானதோ அதைப்போல் ஆரம்பக் கல்வி முக்கியமானது. மாணவர்கள் முதல் ஐந்து வகுப்பில் தடை இல்லாமல் தேர்வு பெற்று வந்தால்தான் மேலே படிப்பதற்கு உற்சாகம் ஏற்படும், வாய்ப்பும் இருக்கும். 69 பிள்ளைகளை ஒரு வகுப்பில் வைத்து நடத்தினால், பாடம் கற்பிக்க வசதி இல்லாமல் ஒரே வகுப்பில் இரண்டு வருஷம், மூன்று வருஷம் தங்க ஏற்பட்டு மாணவனுடைய காலம் பாழாகும் என்பது நிச்சயம்.

5–00 p.m.

ஆரம்பக் கல்வியினுடைய பொறுப்பைப் பெருமளவுக்கு பஞ்சாயத்து யூனியன்களிடம் அரசாங்கம் ஒப்படைத்திருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களால் பள்ளிகள் நிர்வாகத்தை அவ்வளவு திறமையாகக் கவனிக்க முடியாமல் இருக்கிறது; இருந்தாலும் ஏனென்றால் தனியார் துறை பள்ளிகளையும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், கல்வி விஸ்தரிப்பு அதிகாரி, இவர்கள் போன்றவர்கள் கல்வி தணிக்கையாளர்களைப்போல் பள்ளிகளுக்குச் சென்று பார்ப்பதற்கு ஒரு பொறுப்பு கொடுத்தால், கல்வி வளர்ச்சி நல்ல முறையில் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன் உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லாவிலே எட்டாவது வகுப்புவரையில் உள்ள ஒரு பள்ளியில், எட்டாவது வகுப்பில் 32 பிள்ளைகள் இருந்தார்கள். அதிலே ஒரு மாணவன்கூட பரிட்சையில் தேறவில்லை. இந்த மாதிரியான நிலைமை ரொம்ப இடங்களிலே ஏற்படுகிறது. கல்வித் தணிக்கையாளர்களைப்போல் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்குப் பொறுப்பு கொடுத்தால்தான் இன்னும் சிறந்த முறையில் ஆரம்பக் கல்விப் பள்ளிகள் இயங்கும்.

அண்ணல் காந்திஜியின் கனவு நினைவாகும் வகையில், இப்பொழுது தேசம் பூராவும் பஞ்சாயத்து ஆட்சி நிலவி நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இந்தப் பஞ்சாயத்து ஆட்சி முறை இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்கு நம்முடைய மாநில அரசாங்கமும், அமைச்சர்களும், Additional Devlopment Commissioner அவர்களும் அரும் பணியாற்றி வருகிறார்கள். பல முக்கியமான அதிகாரிகளும் இதில் ஒத்துழைப்பு கொடுத்து ஒரு நல்ல பலன் காண வழி செய்திருக்கிறார்கள். ஆனாலும் ஒரு சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு சில அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியன் என்றாலே அலட்சிய மனப்பான்மையோடு நடத்த வேண்டும் என்று கருதுகிறார்கள். அநேகமாக எல்லா வகையான பொதுக் காரியங்களுக்கும் பஞ்சாயத்து தீர்மானம், பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் District Development Council தீர்மானம் அவசியம் வேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்துகிறது. அப்படி இருந்தும் ஒரு சில அதிகாரிகள் பஞ்சாயத்து

7th March 1963] [திரு. பி. வெங்கடாசலத் தேவர்]

யூனியன் தீர்மானங்களை அலட்சியமாக, பொறுப்பற்ற தன்மையில்தான் நடத்துகிறார்கள். உதாரணமாக பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டவுடனே, ஒவ்வொரு ஜில்லாவிலும், அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட எல்லா ஆரம்பப் பள்ளிகளின் File களையும், அந்தந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு அனுப்பிவிடுகிறார்கள். தஞ்சை ஜில்லாவில் ஒரு யூனியனில் ஆரம்பப் பள்ளிகளின் பைல்களை அந்த யூனியனுக்கு அனுப்பவில்லை. யூனியன் சேர்மன் எழுதிக் கேட்டிருந்தும், வரவில்லை. பிறகு யூனியன் தீர்மானத்தின் மூலம் கேட்டிருந்தும், தீர்மானத்திற்காவது மதிப்புக் கொடுத்து, இன்ன காரணத்தால் பைல்களை அனுப்ப முடியவில்லை என்ற பதில்கூட எழுதப்படாமல் வருஷக் கணக்கில் இருக்கின்றது. இது மிகவும் வருந்தத்தக்கதாயிருக்கிறது.

பஞ்சாயத்து ஆட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, பஞ்சாயத்து ஏரியாவில் உள்ள வடிகால்களிலும், வாய்க்கால்களிலும் பாசிக் குத்தகை, மீன் குத்தகை பஞ்சாயத்தைச் சேர்ந்தது என்று பஞ்சாயத்துச் சட்டத்தில் இருந்தாலும்கூட, சில வடிகால்களில் இந்தக் குத்தகையை Revenue இலாக்காவே ஏலம் விட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்திடமிருந்து தீர்மானம் போயும் சில அதிகாரிகள் அதைக் கவனிக்காமல் அலட்சியப் படுத்தியிருக்கின்றனர். தஞ்சை ஜில்லாவில் ஒரு பஞ்சாயத்தில் 1961-62-ல் ஒரு வடிகாலில் பாசிக் குத்தகையை ஏலம் போட்டு பஞ்சாயத்து குத்தகைத் தொகையை வாங்கியிருக்கிறார்கள். ஆனால் 1962-63-ல் அதே குத்தகையை ரெவின்யூ இலாக்கா ஏலம் விட்டார்கள். ஏலம் விட்டு வந்த வருமானம் பஞ்சாயத்துக்குக் கிடைக்கவில்லை. ஆகவே பஞ்சாயத்துகளுக்கு அந்த பாசிக் குத்தகைகளைக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புறம்போக்கு நிலத்தின் வருமானத்தை அந்தந்தப் பஞ்சாயத்துக்களுக்கு கொடுத்தால் சௌகரியமாக இருக்கும். ஓராயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட புறம்போக்கு நிலம் ஒரு பஞ்சாயத்து ஏரியாவில் இருந்தால், அதன் வருமானத்தைப் பஞ்சாயத்து யூனியனுக்காவது கொடுக்கும்படி அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும்.

சிமெண்டு பற்றாக்குறைபற்றி நமது கவுன்சிலின் முதல் கூட்டத்திலேயே எல்லோரும் பேசியிருக்கிறார்கள். சிமெண்டைப் பஞ்சாயத்து யூனியன் மூலமாக விநியோகம் செய்தால் சரியாகச் செய்ய முடியும் என்றுகூட நானே யோசனை சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு இப்போது ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. டெபுடி தாசில்தார்களுக்கு சிமெண்டு விநியோகம் செய்கிற அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு டெபுடி தாசில்தாருக்கு இரண்டு யூனியன் பிரதேசங்கள்கூட கொடுத்திருக்கிறார்கள். சிமெண்டை வாங்குகிறவர்கள் அதை உபயோகப் படுத்துகிறார்களா, இல்லையா என்று பார்க்க அவர்களால் முடிவதில்லை. அதைக் கவனிக்க அவர்களிடம் இருக்கிற அலுவலர்கள்

[திரு. பி. வெங்கடாசலத் தேவர்] [7th March 1963

போதாது. இரண்டு யூனியன் ஏரியாவில் சுற்ற வேண்டியிருப்பதால், அவர்களால் முடிவதில்லை. டெபுடி தாசில்தாரைக் கேட்டால் application- களை வரிசைப்படி ரிஜிஸ்தர் செய்து வைத்திருக்கிறோம்; அந்த வரிசைப்படிதான் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்கிறார்கள். சிமெண்டு தேவைப்படாமல் இருப்பவர்கள் கூட Application- ஐப் போட்டால், அவர்களுக்கும் சிமெண்டு கொடுக்கப்படும். அவர்கள் Black Market -ல் விற்க வசதி ஏற்படும். சென்ற கவுன்சில் கூட்டத்தில் பேசிய அங்கத்தினர் மூட்டை ஒன்றுக்கு ரூ. 14, ரூ. 15 என்று விற்கிறார்கள் என்று இச்சபையில் கூறியிருக்கிறார்கள். ஆகவே இது போன்ற தவறு நடவாமல் தடுக்க சிமெண்டு விநியோகத்தைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்தால் அவர்கள் கிராமப் பஞ்சாயத்து பிரசிடெண்டுகளைக் கலந்து, சிமெண்டு வாங்கியவர்கள் சிமெண்டை உபயோகப்படுத்தினார்களா என்று பார்த்து விநியோகிக்க முடியும். ஜில்லாவுக்குள்ள Quota- வை யூனியன் வாரியாகப் பிரித்துக் கொடுத்தால், எல்லோருக்கும் சமமாகக் கிடைக்க வாய்ப்புக் கிடைக்கும். அதற்குத் தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியனில் சில அரசாங்க அலுவலர்கள் வேலை பார்க்கிறார்கள். அவர்களை நியமிப்பதிலும், மாற்றுவதிலும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலைக் கலப்பதே கிடையாது. இதைப்பற்றிக் கூட விவாதம் பண்ணும்போது மத்திய சர்க்காரிடமிருந்து வந்த பஞ்சாயத்து நிதி ஆய்வுக் குழுவைச் சேர்ந்த (Study Team) ஆந்திர ராஜ்யம், மைசூர் ராஜ்யம் இவற்றைச் சேர்ந்த அங்கத்தினர்கள், முன்னாள் ரயில்வே அமைச்சர் திரு. சந்தானம் தலைமையில் வந்தார்கள். இதைக் கேட்டுவிட்டு, இம் மாதிரி அலுவலர்களை நியமிப்பதும், மாற்றுவதும் யூனியன் கவுன்சிலுக்குத் தெரியாதா என்று வியப்புத் தெரிவித்தார்கள். ஆகவே இம்மாதிரி அரசாங்க அலுவலர்களை யூனியனுக்கு நியமிப்பதிலும், மாற்றுவதிலும், யூனியனுக்குத் தெரிந்து செய்தால் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக கடற்கரை ஓர ரோடு Coastal Road அமைப்பதுபற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். Coastal Road அமைக்கும் வேலை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட வேலையாகும். வடகிழக்கு எல்லையில் நாம் ரோடு போடாததால், அனுபவித்த கஷ்டம் நமக்கு இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. ஆகவே இந்த நேரத்தில் Coastal Road மிகவும் அவசியமாகிறது. இதை மனதில் கொண்டு இந்த ஆண்டிலேயே அந்த வேலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

MR. CHAIRMAN : There are two or three names left over in the list which I will call to-morrow. The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

*129. *Notifications issued with G.O. Ms. No.* 5562, *Revenue, dated* 30*th December* 1961, *regarding amendments to the Indian Stamp Rules*, 1925.

*130. *Notification issued with G.O. Ms. No.* 3617, *Food and Agriculture, dated* 26*th November* 1962, *regarding establishment of regulated markets at Sendurai, Andimadam and Kulitalai in Tiruchirappalli district.*

---

* **Laid on the table of the House on 6th March 1963.**



APPENDIX.

(*Vide* Answer to Starred Question No. 49 on page 334.)

Number of Polio cases treated under the different age groups during the years 1958 *to* 1961 *and the number of cases recovered.*

Age group.	1958		1959		1960		1961	
	Number of Polio cases treated.	Number of Polio cases recovered.	Number of Polio cases treated.	Number of Polio cases recovered.	Number of Polio cases treated.	Number of Polio cases recovered.	Number of Polio cases treated.	Number of Polio cases recovered.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1 to 5 years	145	60	440	211	693	547	631	374
6 to 10 years	73	28	194	93	216	184	177	146
11 to 15 years	42	26	63	32	51	46	68	61
16 to 20 years	42	25	38	12	41	32	22	12
21 to 30 years	38	20	27	8	29	14	8	3
31 to 40 years	18	8	23	..	29	16	6	2
41 to 50 years	23	..	20	..	23	..	1	..
over 50 years	7	..	4	..	2	..	..	..
Total ..	388	167	809	356	1,084	839	913	598